# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:102** **தேதி:-25.05.2016**

**மீண்டும் வேதாளம்……**

**BSNL நிறுவனத்தை லாபமடையச் செய்ய VRS திட்டம் அவசியமாம்- CMD BSNL**

INDIAN EXPRESS பத்திரிக்கைக்கு CMD BSNL திரு அனுபம் ஸ்ரீவ்ஸ்தவா 24.05.2016 அன்று அளித்த ஒரு பேட்டியில் BSNL நிறுவனத்தை லாபமடையச் செய்ய VRS திட்டமும் அவசியம் என தெரிவித்துள்ளார். BSNL நிறுவனத்தில் 2,10,000 ஊழியர்களும் அதிகாரிகளும் உள்ளனர். அவர்களின் சராசரி வயது 50. அவர்களின் ஊதியத்திற்கென 15,000 கோடி ரூபாய்கள் செலவு செய்யப்படுகிறது. இது ஏர் இந்தியா நிறுவனம் தனது ஒட்டு மொத்த உள் நாட்டு வெளி நாட்டு சேவைகளுக்காக ஈட்டிய வருமானத்திற்கு இணையானது. ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் செயல்திறனை மேம்படுத்த நிறுவனம் முயற்சி செய்கிறது ஆனால் அவர்களின் வயதை குறைக்க முடியாது எனவும் CMD BSNL தெரிவித்துள்ளார்.

BSNLஐ லாபமாக்கிட விருப்ப ஓய்வு திட்டம் வழியல்ல என CMD BSNLக்கு BSNL ஊழியர் சங்கம் தெரிவிக்க விரும்புகிறது. அதற்கு உதாரணம் MTNL நிறுவனம். அங்கு ஏற்கனவே மூன்று முறை விருப்ப ஓய்வு திட்டம் அமுலாக்கிய பின்னரும் அந்த நிறுவனம் வெகு வேகமாக மூழ்கி வருகிறது. BSNLல் விருப்ப ஓய்வு திட்டத்தை அறிமுகப்படுத்தும் எந்த முயற்சியையும் BSNL ஊழியர் சங்கம் கடுமையாக எதிர்க்கும் என BSNL ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

**JTO நேரடி நியமன தேர்வில் வெற்றி பெற்ற BSNL ஊழியர்களுக்கு ஊதிய பாதுகாப்பு:-** BSNL ஊழியர்கள் முறையாக அனுமதிபெற்று நேரடி நியமன JTO தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தால் அவர்களுக்கு புதியதாக நியமனம் செய்யப்பட்டவர்களை போலல்லாமல் முறையான ஊதிய பாதுகாப்பு கொடுத்து ஊதிய நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு வெளியிட்டுள்ளது.

**2013ஆம் ஆண்டு காலிபணியிடங்களுக்கான JTO LICE தேர்வு வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது:-** ஜோத்பூர் மத்திய தீர்ப்பாய உத்தரவு வந்த பின்னணியில் 2013ஆம் ஆண்டு காலிபணியிடங்களுக்கான JTO LICE தேர்வு நடைபெறுமா என்ற அச்சம் ஊழியர்கள் மத்தியில் இருந்தது. மிக அதிக அளவிலான தோழர்கள் இந்த தேர்வில் போட்டியிட்டனர். கேள்வித்தாள் பலரும் அஞ்சிய அளவிற்கு கடினமானதாக இல்லையென பங்கேற்ற பல தோழர்கள் தெரிவித்தனர். இந்த தேர்வு நடைபெறுவதற்கு நமது BSNL ஊழியர் சங்கம் கடுமையாக முயற்சி எடுத்திருந்தது. தேர்வு எழுதிய அனைத்து தோழர்களுக்கும் BSNL ஊழியர் சங்கம் தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

**GPF முன்பணம்:-** இந்த மாதம் GPF முன்பணம் வழங்குவதற்கு தேவையான நிதி வராதிருந்த சூழ்நிலையில், தமிழ் மாநில சங்கம் மத்திய சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றது. 20.05.2016 அன்று DIRECTOR(FIN) திருமிகு சுஜாதா ரே அவர்களிடம் நமது பொது செயலாளர் விவாதித்ததின் அடிப்படையில் இன்று (24.05.2016) அனைத்து மாநிலங்களுக்கும் தேவையான நிதியினை கார்ப்பரேட் அலுவலகம் வழங்கியுள்ளது.

**ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் இணைப்பே அனைத்து தவறுகளுக்கும் காரணம்- ஏர் இந்தியா CMD தகவல்:-** திறமையற்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கான உதாரணமாக ஏர் இந்தியா நிறுவனம் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. ஏர் இந்தியா நிறுவனத்தின் தோல்விக்கு திறமையற்ற தொழிலாளர்களும் காரணம் என்று கூடுதலாக சொல்லப்படுகிறது. ஆனால் ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் இணைப்பே அனைத்து தவறுகளுக்கும் காரணம் என ஏர் இந்திய நிறுவனத்தின் CMD திரு அஷ்வானி லொஹானி தெரிவித்துள்ளார். இந்த இரண்டு நிறுவனங்களையும் இணைப்பது என அரசாங்கம் முடிவு எடுப்பதற்கு முன் வரை இந்த இரண்டு நிறுவனங்களும், சிறப்பாக செயல்பட்டு வந்தன. திரு லொஹானி தனது BLOGSPOTல், “உண்மையான காரணம் வேறு ஒன்றாக இருக்கும் போது நிறுவனத்தின் தோல்விக்கு சாதாரண ஊழியர்களை குறை கூறுவது எனக்கு வருத்தமளிக்கிறது” என குற்றம் சாட்டியுள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**